பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil D·ily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 13உ (29—7—67) வெள்ளி ★ வெளியூர்: ஆடி 14உ (30—7—67) ஞாயிறு [இதழ்: 39

வேலூரில் அரிசி விலை இறங்குமுகம்!

வேலூர், ஜூலை 23—
வேலூரில் வெளி அங்காடிகளில் அரிசி விலை குறைந்து—சென்ற வாரம் படி ரூ. 2.12, ரூ. 2.25 விற்கப்பட்ட அரிசி—இப்போது ரூ. 1.75-க்கு விற்கப்படுகிறது.

மண்டிகளில் ஏராளமாக பச்சரிசியும், புழுங்கல் அரிசியும் தேங்கிக்கிடப்பதன்றி சிவப்புக் கார் அரிசியும் நியாய விலைக் கடைகளில் விற்பதைவிட மலிவாக, படி ரூ. 1.20-க்கு விற்கப்படுகிறது.

பக்தவத்சலம் காட்டியவழியில் ம.பி.!

போபால், ஜூலை 29—
பொதுத் தேர்தலுக்கு முன்னர் பஞ்ச—நிவாரண வேலைகளில் மலிந்திருந்த ஊழல்கள்—பஸ்தார் மன்னர் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரம்—குலாகிகாளு ஊழல் நிகழ்ச்சி—அரிசி பேர ஊழல் ஆகியவை தொடர்பான 'பைல்'கள் சிலவற்றை அழிக்கும் முயற்சியில் மத்தியப் பிரதேச அரசாங்கத் தலைமையகத்தைச் சேர்ந்த சில முக்கிய அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்களாம்!

நாடாளுமன்றக் கூட்டம் தென்னகத்தில் இல்லை!

சொல்லிவிட்டார் டில்லி அமைச்சர்

புதுடில்லி, ஜூலை 28—
"தென்னக மாநிலங்களில் ஏதாவதொன்றில் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஒன்றை நடத்தத் தற்போது வாய்ப்பில்லை"

என, அமைச்சர் டாக்டர் ராம்சுபாக் சிங், நாடாளுமன்ற மேலவையில் கூறினார்.

மத்திய-மாநில அரசுகளின் அதிகாரங்களுக்கு புதிய வரையறை

அரசியல் சட்டத்தை ஆராய உயர் அதிகாரக் குழு

உணர்வுபூர்வ ஒருமைப்பாடு நிலவ அண்ணா கூறும் யோசனை—குடந்தை வழக்கறிஞர்களிடை ஆய்வுரை

குடந்தை, ஜூலை 28—
"இந்தியா நிர்வாகத் துறையில் ஒன்றுபட்டிருந்தபோதிலும், உணர்வுபூர்வமான ஒருமைப்பாட்டில் வெகு தொலைவில் இருக்கிறது. கியூபெக்கிலிருந்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டு, நமது அரசியல் சட்டத்தில் ஏற்பட்டுள்ள இடைவெளியை நீக்க முயற்சி செய்யவேண்டும்.

"அரசியல் சட்டம் இயற்றப்பட்ட காலத்திலிருந்து நாட்டில் ஏற்பட்டுவந்துள்ள மாற்றங்களும், புதிய புதிய எண்ணங்களும், உண்மையான நடைமுறைகளைச் சந்திக்க நம்மைத் தூண்டியுள்ளன"

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இங்கு இன்று வழக்கறிஞர்கள் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் கருத்தறிவித்தார்.

"அரசியல் சட்டத்தையும் மத்திய-மாநில அரசுகளுக்கிடையே உள்ள உறவு நிலையையும் மறு ஆய்வு செய்யவும், அதிகாரங்களை வரையறுப்பதற்கான யோசனைகளைக் கூறவும் உயர் அதிகாரம் படைத்த கமிஷன் ஒன்றை நிறுவ வேண்டும்"

என்றும் அண்ணா அவர்கள் வற்புறுத்தினார்கள்.

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கல்வித் துறை, மாநில அரசைச் சார்ந்ததாகும்; எனினும், மத்திய அரசில், கல்விக்கென்று ஓர் அமைச்சர் இருந்துகொண்டு மாநில அரசை அதிகாரம் செலுத்துகிறார்!

"அதேபோல் தொழில் துறையும் மாநில அரசின் பொறுப்பில் உள்ளதாகும்; ஆனால், தொழில்களுக்கான லைசென்சு அதிகாரத்தை மத்திய அரசு வைத்துக்கொண்டிருக்கிறது. இதனால் மாநில அரசு பயனுள்ள வகையில் செயல்பட முடியாமல் — அதிகாரம் இல்லாத நிலையில் ஆகிவிடுகிறது!

"மாநில அரசின் அதிகாரங்களைக் கணிசமான அளவுக்கு மத்திய அரசு பறித்துக்கொண்டிருக்கிறது! இதனால் நாட்டின் உணர்வுபூர்வ ஒருமைப்பாட்டுக்கு எதிரான—பொருந்தாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுவே, ஒருவரையொருவர் தவறாகப் புரிந்துகொள்ளும் நிலைக்கும் காரணமாக அமைகிறது!

"'அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டும்' என்று நான் கோருவதனால், நாட்டுப் பிரிவினை கோருவதாகக் கொள்ளக் கூடாது. அந்தக் கோரிக்கையை எங்கள் கட்சி அடியோடு கைவிட்டுவிட்டது."

சேலம் திட்டம் பற்றி டில்லி அமைச்சர்

புதுடில்லி, ஜூலை 28—
சேலம் உருக்காலையை மத்திய அரசே ஏற்று நடத்தும் திட்டம் இன்னும் ஆய்வில் இருப்பதாக உருக்கு அமைச்சர் சென்னா ரெட்டி, மக்களவையில், ஆர். பருவா என்ற உறுப்பினரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

நாட்டின் மொத்த உருக்குத் தேவையையும், மற்றும் பல மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வசதிகள் போன்றவைகளையும் கருத்தில் கொண்டு மற்ற திட்டங்களுடன் சேலம் உருக்காலைத் திட்டத்தையும் ஆய்வு செய்யவேண்டுமெனவும் அமைச்சர் கூறினார்.

சென்னை மக்களுக்குப் பாதிப்பு

சென்னை, ஜூலை 28—
ஆகஸ்டு முதல் நாளிலிருந்து சென்னை நகரில் சர்க்கரைப் பங்கீட்டு அளவு குறைக்கப்படும்; மத்திய அரசு தமிழகத்திற்குக் கொடுக்கும் சர்க்கரை அளவை குறைத்துவிட்டதே இப்பற்றுக்குறைக்குக் காரணமாகும்.

உணவுப் பங்கீட்டு அட்டைகள் வைத்திருப்போருக்கு மட்டுமன்றி, ஓட்டல்களுக்கும் சர்க்கரை அளவு குறைக்கப்படும்.

'ஆட்சி மொழி மசோதாவை ஆறப்போடுவது கூடாது'

'முட்டுக்கட்டையிடும் முயற்சி நடந்தால் விபரீத விளைவுகள் ஏற்படும்'

தலைமையமைச்சரிடம் 100 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனு

புதுடில்லி, ஜூலை 28—
'இந்தி பேசாத பகுதி மக்களுக்கு பண்டித நேரு மனப்பூர்வமாக வழங்கிய உறுதிமொழியைச் செயல்படுத்த வேண்டும்' என்றும், 'அதற்கான மசோதாவைக் கொண்டுவருவதில் எந்தவிதக் கருத்து வேறுபாடும் கூடாது' என்றும் தெரிவித்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் 100 பேர் கையெழுத்திட்டு தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறப்பட்டிருக்கிறது.

"உருவாக்கப்பட்டுள்ள ஆட்சிமொழித் திருத்த மசோதாவை இப்பொழுது கொண்டுவருவதற்கு முட்டுக்கட்டையிடும் முயற்சி ஏதேனும் நடைபெறுமானால், இந்த அரசு, தனது உறுதி மொழிகளைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையை இழந்துவிட நேரிடும்; மாநிலங்களுக்கிடையே வெறுப்புணர்வு ஏற்பட்டு நாட்டின் ஒற்றுமைக்கே ஊறுவிளையும்; தென்னகத்திலும், வங்காளம், அசாம், ஒரிசா ஆகிய மாநிலங்களிலும் கடும் விளைவுகளுக்கு இடம் ஏற்படும்" என்றும் அந்த மனுவில் சுட்டிக்காட்டி எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மனுவில் கையெழுத்துப் பெறுவதில் இடதுசாரிக் கம்யூனிஸ்டு உறுப்பினர் பி. இராமமூர்த்தி முன்னின்று முயற்சி செய்தார்.

மற்றும் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் க. அன்பழகன், சுதந்தராக் கட்சியைச் சேர்ந்த எம். ஆர். மசானி, என். ஜி. ரங்கா, எஸ். எம். ஜோஷி (ச.சோ.), எஸ். என். திவிவேதி சாமர்குகா (பி.சோ), காஷ்மீரைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினரான ஜி. எம். பக்ஷி, லால்பகதூர் சாஸ்திரியின் மகனான அரி சாஸ்திரி, திருமதி விஜயலட்சுமி பண்டிட், வலது கம்யூனிஸ்டு தலைவர் பூபேஷ் குப்தா, இரேன் முகர்ஜி, இடதுசாரி கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் பி. இராமமூர்த்தி, ஏ. கே. கோபாலன், ச. இராசாராம் (தி.மு.க.), மற்றும் சுயேச்சை உறுப்பினர்களும் கையெழுத்திட்டுள்ளனர்.

சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் எஸ். எம். ஜோஷி, 'மசோதாவைக் கொண்டுவருவதாகக் கொடுக்கப்பட்ட உறுதி மொழி காப்பாற்றப்பட வேண்டும்' என்ற வாசகத்தை எழுதிக் கையெழுத்திட்டுள்ளார்.

இந்த மனுவைத் தலைமையமைச்சருக்கு அனுப்பிவைத்த திரு. பி. இராமமூர்த்தியும், திரு. என். சி. சட்டர்ஜியும், அத்துடன் அறிமுகக் கடிதம் ஒன்றையும் இணைத்துள்ளனர்.

"இந்திய அரசியல் வாழ்க்கையின் தன்மையே மாறிவருகிறது; பல்வேறு மாநிலங்களில்—குறிப்பாகத் தென்னாட்டிலும், மேற்கு வங்கத்திலும், ஒரிசாவிலும் மாற்றுக் கட்சி ஆட்சி ஏற்பட்டுள்ளன.

"இந்த நேரத்தில், மாறான முடிவை மேற்கொண்டு, வட்டார அல்லது மொழி வெறியைத் தூண்டாமல் கவனித்துக்கொள்வது அவசியம். இத்தகைய முக்கியமான பிரச்சினையில் தயக்கத்தையோ, பலவீனத்தையோ காட்டலாகாது.

"இந்தி மொழியையோ, பண்பாட்டு—வாழ்க்கைத்துறையில் அதற்குரிய மதிப்பையோ நாங்கள் எதிர்க்கவில்லை; மற்ற மொழிகளுக்கும் உரிய இடம் அளிக்கப்படவேண்டும் என்பதும், ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக நீடிக்கவேண்டும் என்பதுமே எங்கள் கோரிக்கை"

என்று கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துறைமுகத் தொழிலாளர் போர்க் கோலம்!

"துறைமுகத் தொழிலாளரின் போனஸ் முதலிய கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், நாட்டின் பெரிய துறைமுகங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஆகஸ்டு 10-ம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்வார்கள்" என்று, அனைத்திந்திய துறைமுகத் தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ். ஆர். குல்கர்னி கூறினார்.

'காந்தி சீடர்'கள் எங்கே?

நூற்றாண்டு விழா நிதிக்கு சல்லி காசுகூடத் திரட்டவில்லை

புதுடில்லி, ஜூலை 29—
காந்தி நூற்றாண்டு விழாவுக்குப் பொதுமக்களிடமிருந்து இது வரை வந்துள்ள நன்கொடை 30 ரூபாய்தான்!

மத்திய உள்துறை அமைச்சர் திரு. சவானின் யோசனையின் பேரில் இந்த நன்கொடைத் தொகை, 'சில்லறை வருமானம்' என்ற இனத்தின்கீழ் வரவு வைக்கப்பட்டிருக்கிறது!

காந்தி நூற்றாண்டுவிழா குழுவின் அறிக்கை, மத்திய அரசின் தலைவர்களுக்கு வேதனையையும் சங்கடத்தையும் அளித்திருக்கிறது!

இந்திய அரசிடமிருந்து 10 இலட்சம் ரூபாய் மானியம் கிடைத்திருக்கும்போது, அதிகாரப் பற்றற்ற வட்டாரங்களிலிருந்து ரூ. 30 மட்டும்தான் கிடைத்திருக்கிறது என்பதே வேதனைக்குரிய காரணம்.

கிடைத்துள்ள இந்த முப்பது ரூபாயும் இந்திய மக்களிடமிருந்து அல்ல—'காந்தி நூற்றாண்டு விழாக் கொண்டாடப்பட இருக்கிறது' என்பதை அறிந்த ஓர் அமெரிக்கக் குடிமகன் அனுப்பிவைத்த தொகையாகும்.

'தேர்தல் நிதி' என்றால் மட்டும் தொழில் முதலாளிகளிடமும் வியாபாரிகளிடமும் ஓடோடிச் சென்று, 'நன்கொடை' என்ற பெயரில் இலட்சம் இலட்சமாகச் சேர்க்கும் காந்தி சீடர்களான காங்கிரசாரில் ஒருவர்கூட, ஒரு சல்லிக் காசுகூட காந்தி நூற்றாண்டு நிதிக்குச் சேர்த்துக் கொடுக்கவில்லை என்பதும், 'தேச பக்தர்' வேடம் போட்டு காந்தி சீடர்களுடன் கூடிக் குலவிடும் பெர்மிட்—லைசென்சு—பஸ் ரூட் காங்கிரசுக்காரர்களும் இதுவரை ஒரு காசுகூட இதற்கு நன்கொடை வழங்க முன்வரவில்லை என்பதும் சிந்திக்கத்தக்கது.

நம்நாடு

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. ...

திருவள்ளுவராண்டு 1998 ஆடி 13 (29—7—67) சனி

தூத்துக்குடித் துறைமுகம்-- கடற்படைத் தளமாக வேண்டும்

[3]

இந்தியாவின் கிழக்குப் பகுதியிலிருக்கின்ற அரபிக் கடல் வழியாக எதிர்பார்க்கக்கூடிய படையெடுப்பு அபாயத்தைவிட, தெற்குக் கடல்—கிழக்குக் கடல் வழியாக எதிர்பார்க்கக்கூடிய படையெடுப்பு அபாயம் மிகுதியானதாகும். இவ்வபாயத்தை இந்திய அரசு உணர்ந்துகொண்டிருக்கிறது என்பதற்கு, கிழக்குக் கடற்கரைப் பகுதியிலிருக்கின்ற விசாகையில் மூன்ருவது கடற்படைத் தளத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது ஏற்றதோர் சான்ருகும்.

இதைக் கொண்டு மட்டுமே, கிழக்குக் கடல் வழியாக ஏற்படக்கூடிய படையெடுப்பு அபாயத்தை, உள்ளது உள்ளவாறு இந்திய அரசு உணர்ந்துகொண்டிருப்பதாகக் கொள்ளுவதற்கில்லை. தூத்துக்குடித் துறைமுகத்தையும் மற்ருெரு கடற்படைத் தளமாக—அதாவது, நான்காவது கடற்படைத் தளமாக அமைத்திடத் தீர்மானித்தால்தான், 'கிழக்குக் கடல் வழியாக ஏற்படக்கூடிய படையெடுப்பு அபாயத்தை இந்திய அரசு தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கிறது' என்ற முடிவுக்கு வரமுடியும்.

தூத்துக்குடித் துறைமுகத்தை நான்காவது கடற்படைத் தளமாக அமைப்பதனுல், கிழக்குப் பகுதியிலுள்ள வங்காளக் கடல் வழியாக ஏற்படக்கூடிய படையெடுப்பிலிருந்து இந்தியாவைப் பாதுகாப்பது என்பது மட்டுமே அடங்கி இருக்கவில்லை.

தெற்கில் பெருங் கடலாக இருந்துவரக்கூடிய இந்துமகா சமுத்திரம் வழியாக ஏற்படக்கூடிய அபாயத்திலிருந்து இந்தியாவைப் பாதுகாத்துக்கொள்ளுவதும் அடங்கியிருக்கிறது.

'தெற்குப் பெருங்கடல் வழியாக இந்தியாமீது தாக்குதல் ஏற்படமுடியாது' எனக் கருதுவதற்கில்லை ; அந்தக் கடல் வழியாகவும் படையெடுப்பு ஏற்படத்தான் ஏற்படும். அந்தக் கடல் வழியாக ஏற்படக்கூடிய படையெடுப்பை எதிர்த்து நிற்கின்ற சக்தி, இலங்கைக்கு இருக்கமுடியாது. அவ்வாறு ஏற்படக்கூடிய படையெடுப்பை, இந்தியாவின் சார்பில் எதிர்த்து நிற்க இலங்கை இணங்கக்கூடும் என்பதும் நிச்சயமில்லை.

இந்தியாவின் தெற்குக் கடல் வழியாக ஏற்படக்கூடிய படையெடுப்பை, விசாகைக் கடற்படைத் தளத்திலிருக்கக்கூடிய போர்க் கப்பல்களைக் கொண்டுதான் சந்தித்தாக வேண்டும். இருக்கக்கூடிய தொலைவின் காரணமாக, தெற்கில் ஏற்படக்கூடிய அந்நியத் தாக்குதலை உடனடியாகச் சந்திப்பது இயலாததாகும். எனவே, ஏற்படக்கூடிய எதிரியின் தாக்குதலை உடனடியாகச் சந்தித்து முறியடிக்க வேண்டுமானுல், தூத்துக்குடியை உடனடியாக நான்காவது கடற்படைத் தளமாக ஆக்க இந்திய அரசு முன்வர வேண்டும்.

நமது நாட்டின்மீது, சீனு கொண்டிருக்கின்ற பகையை, குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. சீனுவுடன் நட்புறவுடன் இருக்க நாம் விரும்பினுலும், அந்த நாடு நம்முடன் நட்பாக இருக்க விரும்பவில்லை என்பது மெய்ப்பிக்கப்பட்டுவிட்டிருக்கிறது.

இந்தியாவின் கிழக்குக் கடல் வழியாகவும், தெற்குப் பெருங்கடல் வழியாகவும் ஏற்படக்கூடிய படையெடுப்பு அபாயம், சீனுவிடமிருந்துதான் என்பது எதிர்பார்க்கக் கூடியதே! பெரிய அளவில் அந்தப் படையெடுப்பு இருக்காது எனக் கொள்ளுவதானுலும், வெறும் அச்சுறுத்தலைக கொண்டதாகவாவது இருந்திடத்தான் செய்யும்.

இன்று வரையில், கடல் வழியாக நம்மை அச்சுறுத்துவதில் சீனு ஈடுபடாமைக்குக் காரணம் உண்டு. அக்காரணம், இனியும் நீடித்திருக்கக்கூடும் எனக் கருதுவதற்கில்லை.

சிங்கப்பூரில் பிரிட்டிஷ் கடற்படைத் தளம் இருந்துவருகிறது. அந்தத தளத்திலிருக்கின்ற பிரிட்டிஷ் கடற்படை, கடல் வழியாக சீனு மேற்கொள்ளக்கூடிய படையெடுப்புக்கு ஒப்பற்ற தடையாக இருந்திருக்கிறது.

இனி, அந்தக் கடற்படைத் தளத்தைக் கலைத்துவிடுவது எனப் பிரிட்டிஷ் அரசு தீர்மானித்துவிட்டது. அக்கலைப்புக்கான நாளும் குறிக்கப்பட்டுவிட்டது. 1975-ம் ஆண்டுக்குள், சிங்கப்பூர் கடற்படைத் தளம், ஏட்டில் மட்டுமே படித்தறியத்தக்க ஏற்பாடாகிவிடப் போகிறது.

சிங்கப்பூர் கடற்படைத் தளத்தைப் பிரிட்டிஷ் அரசு மூடிவிடுவதன் விளைவாக, அக்கடற் பகுதியில் தனது படையெடுப்பைத் தடுத்து நிறுத்த எவரும் இல்லை என்ற நினைப்பை, சீனு கொள்ளத்தான் கொள்ளும். சீனு மேற்கொள்ளக்கூடிய அப்படையெடுப்பை, சிங்கப்பூர் எதிர்த்து நிற்க முனைந்தாலும், 'முடியாது' என்பது உறுதியிலும் உறுதி.

இக்காரணத்தினுல், கிழக்குக் கடல்—தெற்குக் கடல் வழியாகச் சீனுவினுல் நமது நாட்டிற்கு ஏற்படக்கூடிய அபாயம் கூடுதலாவதுடன், உறுதியுமாகிறது. இவ்வுண்மையை இந்திய அரசு, இப்பொழுதே உணர்ந்துகொள்ளவேண்டும்.

கடல் வழியாக இந்தியாமீது இதுவரையில் சீனு தாக்கத் துணியாதிருப்பதற்கு, சீனக் கடலில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்ற அமெரிக்காவின் 7-வது கடற்படை பெரும் தடையாக இருந்துவருகிறது. இக்கடற்படையைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என வற்புறுத்துவதில், இந்தியா முன்னணியிலிருக்கிறது.

அக்கடற்படையை அமெரிக்கா திரும்பப் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில், அதற்குப் பின்னர், ஆசியக் கடற் பகுதி அனைத்திலும் சீனுவின் ஆதிக்கம்தான் கொடிகட்டிப் பறக்கும். கடலில், சீனுவைத் தட்டிக் கேட்கும் ஆற்றல் பெற்றுள்ள அரசே கிடையாது.

அந்தக் கட்டத்தில், தனது தெற்கு—கிழக்குக் கடல் பகுதியைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டிய முழுப் பொறுப்பும் இந்தியாவையே சார்ந்துவிடுகிறது. தானே தனித்து நின்று ஏற்றுக்கொள்ள வேண்டிய அப்பொறுப்பை, இந்தியாவால் தட்டிக் கழித்துவிட முடியாது.

தானே தனித்து ஏற்கவேண்டிய அப்பொறுப்பை வெற்றிகரமாகச் செயலாற்றிவருவதற்கு, தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுத்தி, நான்காவது கடற்படைத் தளமாக அதனை அமைத்திடவேண்டியது இந்தியாவின் தலையாய கடமையாகிறது. இக்கடமை, நாட்டின் பாதுகாப்பைப் பொறுத்ததாக உள்ளதால், இதைத் தட்டிக் கழிப்பதோ, 'காலம் வரும்பொழுது பார்த்துக் கொள்ளலாம்' எனத் தாமதிப்பதோ அறவே கூடாது.

திட்டமிட்டுள்ளபடி, 'தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுத்துவதற்குப் போதிய பணமில்லை ; திட்டம், எதிர்பார்த்த வருமானத்தைத் தரக்கூடியதல்ல' எனக் கூறக்கூடிய காரணங்களை, அத்துறைமுகத்தைக் கடற்படைத் தளமாக்குவதற்குக் கூறமுடியாது. நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடு, இலாப--நட்டக் கணக்கைப் பொறுத்ததல்ல!

நாட்டின் பாதுகாப்புக்கெனப் பெருந் தொகையை, இந்திய அரசு செலவழித்துவருகிறது—செலவழிக்கப் பெருந் தொகையை ஒதுக்கியும் உள்ளது. அத்தொகையில், தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுத்துவதற்காகத் தேவைப்படக்கூடிய தொகை சிறிய அளவுடையதே ஆகும். எனவே, 'தூத்துக்குடியில் நான்காவது கடற்படைக் தளம் அமைக்கவேண்டும்' என்ற முடிவினை உடனடியாக ஏற்றுக்கொண்டு, பாதுகாப்புச் செலவுக்கென ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகையிலிருந்து தேவைப்படக்கூடிய தொகையை ஒதுக்கி, ஏற்கனவே திட்டமிட்டிருக்கின்றபடி தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுத்தியும் விரிவாக்கியும் அமைத்திட இந்திய அரசு துணியவேண்டும்.

இதன் விளைவாக, தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் நிறைவு பெறுவதுடன், நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடும் சிறப்பெய்தும் ; 'நம்முடைய விருப்பம் நிறைவு பெற்றுவிட்டது' எனத் தமிழக மக்கள் மகிழ்ச்சி கொள்ளுவர்.

"இந்தியாவின் தேவைக் கேற்பத் தெற்குக்கடற் பகுதியில் கடற்படைத் தளங்கள் அமைக்கப்பட வேண்டும் ; நாட்டின் பாதுகாப்புக்கு அவை இன்றியமையாதவையாகும்" என்ற கருத்தை இதற்கு முன்பிருந்த கடற்படைத் தளபதி ஏற்கனவே இடித்துரைத்திருப்பதை, இந்திய அரசுக்கு இத்தருணத்தில் நினைவுபடுத்துகிறேம்.

—கா. க.

மக்கள் நல்வாழ்வு பெற்ருல்தான் என் ஆசை நிறைவேறும்!

"காங்கிரசுக்காரர்கள் சொன்னுர்கள்—'தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தால் பள்ளிகள் மூடப்படும்' என்று! ஆனுல் நாம், கல்விக்காக அவர்கள் செலவிட்டதைவிட ரூ. 7 கோடி அதிகமாகச் செலவு செய்யத் திட்டம் வகுத்துள்ளோம்!

"அக்டோபர் மாதம் அறுவடையான பிறகு, 'அரிசியில்லை' என்ற குறை தமிழ்நாட்டில் மூலை முடுக்கில்கூட இருக்காது!

"இவை மட்டுமல்ல; அரசு உதவியின்றி வானத்தை மட்டும் நம்பி வாழும் உழவர்களுக்குப் புன்செய் நிலத்திற்கு வரியில்லை!

"ஏழைகளுக்குத்தான் இலவசப் புகுமுகக் கல்வி என்ற முறையை ஏற்படுத்தியிருக்கிறேம்.

"இதே நேரத்தில், நிலத்தை வைத்துத் தேவைக்கு அதிகமாகச் சம்பாதித்து இலாபம் அடைபவர்களுக்கு- போட்டால் தாங்கக்கூடியவர்களுக்கு வரி போட்டிருக்கிறேம்!

"இவை மட்டுமன்றி, தொழில் நிலையம் ஏற்படுத்தி வேலை வாய்ப்புக்கொடுக்க முயற்சி நடைபெறுகிறது!

"ஏராளமாகத் தமிழகத்தில் கல்லும் முள்ளுமாக இருக்கும் காட்டுப் பகுதிகளை-விவசாய அமைச்சர் கோவிந்தசாமி விளைநிலமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிருர்!

"மக்கள் முன்னேற்றத்திற்காக, மார்ச் 6-ம் நாள் முதல் இதுவரை செய்த சாதனையை இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள இதழ்களெல்லாம் பாராட்டுகின்றன; வெளிநாட்டிலிருந்து வருவோரும் போவோரும் வாயாரப் புகழுகின்றனர்; ஆனுல், 'காங்கிரசு பாராட்டவில்லையே' என்று நீங்கள் நினைக்கலாம்.

"அவர்கள் ஆண்டு அனுபவித்தவர்கள்! பஸ் முதலாளிகள் கைலாகு பெற்றவர்கள்! பணக்காரர்கள் வீசிய நோட்டுக்களைப் பெற்றவர்கள்! அப்படிப்பட்டவர்கள்—சுகபோகத்தை அநுபவித்தவர்கள்-திடீரென்று உல்லாச வாழ்வை இழந்துவிட்டதால் எரிச்சல் கண்டு ஓலமிடத்தான் செய்வார்கள்! 'காலம் முழுவதும் நானேதான்' என்று மனப்பால் குடித்தவர்கள், பதவி பறிபோனதால் அப்படி எரிந்து விழுகிருர்கள்!

"தி. மு. கழகம் இவ்வளவு விரைவில் அரசுப் பொறுப்பை ஏற்குமென்று அரசியல்வாதிகள் எதிர்பார்க்கவில்லை; எதிர்பார்க்காதது மட்டுமல்ல—ஆளத் தகுதியில்லையென்று எண்ணினுர்கள்; அதுமட்டுமல்ல—'அரசியலுக்கே தகுதியற்றவர்கள்' என்றும் எண்ணினுர்கள்!

"யாரை, 'இலாயக்கற்றவர்கள்' என்று கருதினுர்களோ—யாரை, 'சினிமாக்காரர்கள்' என்று ஏளனம் செய்தார்களோ—'திராவிட முன்னேற்றக் கழகத்திலே படித்தவர்கள்தான் இருக்கிருர்கள்; பாடுபடுகின்ற கிராம மக்கள் இல்லை' என்று யாரைக் கேலி பேசினுர்களோ—அவர்கள்தான் இன்று, அரசுப் பொறுப்பை ஏற்றுள்ளனர்!

"'இவர்கள் என்ன சாதிப்பார்கள்' என்று இன்னமும் காங்கிரசுக்காரர்கள் பேசிக்கொண்டிருக்கிருர்கள். அதனுல் தி. மு. கழகத் தோழர்கள், நமது சாதனைகளை விளக்கி மேடைக்கு மேடை சொல்லிவருகிருர்கள்! இதைக் கேட்ட காங்கிராசார்—அதைக்கூடப் பொறுக்காமல்—'இது போதுமா? இது போதுமா?' என்கின்றனர்!

"எந்தெந்த விதத்தில்—எதையெதை எப்படிச் செய்தால் உற்பத்தி பெருகும் என்று ஆராய்ந்து அந்தவிதத்தில் நாம் முயற்சியை மேற்கொண்டுள்ளோம்! இவ்வருடத்தில் மட்டும் நீர்ப்பாசன வசதிக்காக—குளங்களைத் தூர்வார—கிணறுகளைச் செப்பனிட—ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

"இங்கு சொன்னுர் ஒருவர்—என்னை அண்ணனுகக் கண்டு - அறிஞராகக் கண்டு - அமைச்சராகக் கண்டதால், 'ஆசை நிறைவேறியது' என்று!

"ஆனுல், எனது ஆசை எப்போது நிறைவேறுமென்ருல், 'உழுபவன் உண்மையான வாழ்வு வாழ்கிருன்; நெசவாளி நேர்த்தியாக வாழ்கிருன்; பாட்டாளி பட்டினியின்றி வேலை செய்கிருன்' என்ற நிலை எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுதுதான்!

"நெசவாளர்கள், 'போதுமான அளவுக்கு நூல்வேண்டும்'என்று என்னிடம் கேட்கிருர்கள்.

"ஆலை கொடுக்கும் நூலுக்கு விலையை நிர்ணயம் செய்வது டில்லி; நான் அதற்கு எழுதத்தான் முடியுமேதவிர, வேறேதும் செய்யமுடியாது—இதை நீங்கள் உணர வேண்டும்.

"என்னிடம் நூல் டிப்போ இருப்பது போலவும், நான்தான் அதைப் பகிர்ந்து கொடுப்பது போலவும் யாரும் நினைத்துவிடக் கூடாது!

"பொதுவாக மக்கள் — குறிப்பாகத் தி. மு. கழகத் தோழர்கள், 'மாநில அரசுக்கு என்ன அதிகாரங்கள்? மத்திய அரசுக்கு என்ன அதிகாரங்கள்' என்பதை உணரவேண்டும்; எனக்கு உள்ள அதிகாரத்தை வைத்துத்தான் உங்களுக்கு எதுவும் செய்ய முடியும்!

"மாநில அரசுக்கு உள்ள அதிகாரத்தில், நில வரி ஒன்றுதான் குறிப்பிடத்தக்கது; மாநில அரசின் அதிகாரம்—பணம் ஆகியவைகளை மத்திய அரசுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு இருப்பதைக் காணலாம்! இதைப் போக்க வேண்டுமானுல், மத்திய அரசு, மாநில அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்; இல்லையென்ருல், தேவையான அதிகாரத்தை வழங்கி, நாட்டு முன்னேற்றத்திற்கு அது வழிவிட வேண்டும்.

"ஆனுல் அதுவரை கைகட்டி இராமல், தி. மு. கழகம், செவ்விய முறையில் அரசோச்சுகிறது! இதே நிலையில் சென்ருல், நிச்சயமாக நான் சொல்கிறேன்—நெசவாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும்! பின்தங்கியவர்களின் வாழ்வைச் சீர்படுத்த முடியும்!

"இந்த அளவுக்குக் கழகத் தோழர்கள் விழிப்போடு இருந்து அரசுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும்.

"உழைக்கின்ற தோழர்கள் ஏராளமாக இருக்கிருர்கள்! உங்கள் வாழ்க்கையை உயர்த்துவதைத் தவிர வேறு இலட்சியம் எங்களுக்கு எதுவுமில்லை! இந்த அரசு நீங்கள் அமைத்த அரசு! உங்களிடம் எந்த அளவுக்கு வலிவுண்டோ அந்த அளவு அரசாங்கமும் வலிவுடையதாக இருக்கும்!"

--முதலமைச்சர் அண்ணு

(இராமகிருஷ்ணராசுபேட்டை பொதுக்கூட்டத்தில்)

விசாரணைக்கு உட்படத் தயார்!

காங்கிரசு குற்றச்சாட்டுமீது ஒரிசா முதல்வர் கருத்து

ஒரிசா முதலமைச்சர் சிங்தேவ், மற்றும் பிற அமைச்சர்கள்மீது ஊழல் புகார்களைச் சுமத்தி காங்கிரசு எம்.எல்.ஏ.-க்களும், எம்.பி.-க்களும் ஒரு மனுவை குடியரசுத் தலைவரிடம் அளித்திருந்தார்கள். இம்மனு மீது கருத்துத் தெரிவிக்கும்படியாக உள்துறை அமைச்சர் சவான், முதலமைச்சருக்கு அனுப்பியிருந்தார்.

இப்புகார் மனுவில் கூறப்பட்டுள்ள ஊழல் புகார்களை விசாரிக்க ஒரு கமிஷனை அமைக்க வேண்டுமென சவானை, சிங்தேவ் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

1962 முதல் 1967-வரை காங்கிரசு ஆட்சியாளர்கள் இருந்தபோது நடந்த ஊழல்களை விசாரிக்க ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பதும், அக்டோபர் முதல் இக்கமிஷன் விசாரணை தொடங்க விருப்பதும் தெரிந்ததே. இதறகுப் போட்டியாகவே காங்கிரசு எம்.எல்.ஏ.-க்கள் இந்தப் புகார் மனுவை அளித்திருக்கிருர்கள்.

உலகத் தமிழ் மாநாடு

ஓவியக் காட்சிபற்றிக் கருத்துரை

சென்னை, ஜூலை 25—

1968-ம் ஆண்டு சனவரித் திங்களில் சென்னையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி நடைபெறவிருக்கும் காட்சியில் வைப்பதற்கான ஓவியங்களை உருவாக்குவது பற்றி ஆராய்வதற்கு நேற்று மாலை மறைமலையடிகள் நூல் நிலையத்தில் தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் சார்பில் அறிஞர்களின் கூட்டம் நடைபெற்றது. அதில் தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

வந்திருந்த அனைவரையும் வரவேற்ற கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா (பிள்ளை) உரை நிகழ்த்தினர்; 'சங்க இலக்கியத்திலிருந்து சுவைமிக்க, பகுதிகளை ஓவியமாக உருவாக்கி விளக்குவதுதான் கூட்டத்தின் நோக்கம்' என்று அவர் குறிப்பிட்டார்.

கலந்துகொண்டவர்களில் திருவாளர்கள் சோமு, பாலூர் கண்ணப்ப (முதலியார்), ஏ. கே. தங்கவேலர், சி. பாலசுப்பிரமணியம், டி.கே. சண்முகம், தணிகை உலகநாதன், வடிவேலாயுதனார், சின்னராசு ஆகியோர், ஓவியங்கள் எவ்வகையில் உருவாக்கவேண்டும் என்பதைப் பற்றிக் கருத்துத் தெரிவித்தனர்.

இறுதியாக அமைச்சரவர்கள் தம் கருத்துக்களை வெளியிடுகையில் குறிப்பிட்டதாவது:—

"மேனாட்டவர்கள் பார்த்தவுடனேயே வியக்கும்வண்ணம் ஓவியங்கள் அமைய வேண்டும். இயன்ற மட்டும் புலவர்கள், நிகழ்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டியுள்ளதுபோல்பாடியுள்ள பாடல்களையே ஓவியங்கள் வரை தற்குரிய பொருள்களாக எடுத்துக்கொள்ளவேண்ம.

பெருஞ்செலவில் செய்யவேண்டிய ஓவியங்களை தமிழக அரசே தன் செலவில் செய்யும்; பிறவற்றைக் கல்லூரிகளும், பள்ளிகளும், பிற 'தனிப்பட்டோரும் கூடிக் கலந்து செய்யவேண்டும். எல்லோருடைய ஒத்துழைப்பும் இருந்தால்தான் மாநாடு சிறப்பாக நடைபெறும்."

பின்னர் திரு.சோமு அவர்களைத் தலைவராகக் கொண்ட உட்குழு ஒன்று ஓவியங்களைப் பற்றிப் பலர் திரட்டித்தரும் கருத்துக்களை ஆராய்வதற்கென அமைக்கப்பட்டது.

திருமலைப்பட்டி ஊராட்சி மன்றம்

புதிய கட்டிடத் திறப்பு

புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருமலைப்பட்டி ஊராட்சி மன்றத்தில் ரூ. 6,000 செலவில் புதிதாகக் கட்டப்பட்ட ஊராட்சி மன்றக் கட்டிடத்தை திரு. எம். பரமசிவம் எம்.ஏ. தலைமையில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். ஏ. விசுவநாதன் ஐ.ஏ.எஸ். திறந்துவைத்தார்.

நாமக்கல் மோட்டாட்சித் தலைவர் திரு. வை. சொக்கலிங்கம் பி.ஏ. சிறப்புரை வழங்கினர்.

புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் பெருந்தலைவர் திரு. அ. இராமசாமி (உடையார்) தேசியக்கொடி ஏற்றிவைத்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் பேசுகையில், 'கிராம மக்கள் ஊராட்சி மன்றங்களின் மூலம் கிராமம் செழிக்க எல்லா வாய்ப்புக்களையும் அரசினர் அளித்துள்ளனர்; கிராம மக்கள் தங்கள் குறைகளை அவ்வப்போது நீக்க அதிகாரிகள் பாடுபடுவார்கள்' என உறுதி அளித்தார்.

திரு. கோவிந்தன் நன்றிகூற நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது.

நெல்லை எம். ஜி. ஆர். மன்றம்

நெல்லை 19-வது வட்ட எம். ஜி. ஆர். மன்ற நிர்வாகிகள் வருமாறு:—

தலைவர்: மா. சுப்பையா; செயலாளர்: ஆ. இராமசாமி; துணைச் செயலாளர்: சுப்பையா; பொருளாளர்: வே. அண்ணாமலை.

முகவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி ஊழியர் சங்கம்

இராமநாதபுர மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி ஊழியர்களுக்கான தொழிற் சங்கத் துவக்க விழாக் கூட்டம், 16—7—67-ல், சென்னை மாநில கூட்டுறவு பாங்கி ஊழியர் சங்கச் செயலாளர் ஜி. என். சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

திரு. மு. வீ. நாராயணசாமி வரவேற்புரை நிகழ்த்தினர்.

இராமநாதபுர மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ். எஸ். தென்னரசு, உ. பில்லப்பன் எம்.ஏ.பி.எல்., சி. கோவிந்தராசன் எம்.எல்.ஏ. (மதுரை மத்தியத் தொகுதி), பி. எஸ். இராமசுப்பிரமணியம் பி.ஏ.பி.எல்., சி. சுந்தரக்கண்ணு, வி. எஸ். மணியம், செகநாதன், என். கே. வெங்கடாசலம், மீனாட்சி சுந்தரம் ஆகியோர் தொழிற் சங்கம் அமைக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், தொழிற் சங்கத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும் பேசினர்.

பின், ஊழியர்களின் பொதுப் பேரவைக் கூட்டம் திரு. கே. சண்முகம் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, சங்கச் சட்ட திட்டங்களை ஒப்புக்கொண்டு, சங்கத்தை தொழிற்சங்கச் சட்ட திட்டத்தின் கீழ் பதிவு செய்ய முடிவு செய்து கீழ்க்கண்டவர்கள் சங்கத்தின் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: உ. பில்லப்பன் எம்.ஏ. பி.எல்.; துணைத் தலைவர்: என். கே. வெங்கடாசலம்; பொதுச்செயலாளர்: எம். வி. நாராயணசாமி; கூட்டுச் செயலாளர்கள்: எம். முத்தப்பன், எஸ். சோமசுந்தரம்; பொருளாளர்: ஆர். எம். மெய்யப்பன்; துணைப் பொருளாளர்: எம். சிவராமன்; மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

சென்னை 40-வது வட்ட தோழமைக் கழகம்

16—7—67-ல் 40-வது வட்ட தி. மு. க. செயலாளர் ஒப்புதலுடன் தோழர் திருமுகம் அவர்களை ஆணையாளராகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட தோழமைக் கழக நிர்வாகிகள் வருமாறு:—

அவைத் தலைவர்: மு. கலைச்செல்வன்; செயலாளர்: பா. செல்வராசு; துணைச்செயலாளர்: மேகவண்ணன்; பொருளாளர்: அ. ர. இனியன்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் ஏழு பேர்.

கோவை ரிக்ரியேஷன்ஸ்

'கோவை ரிக்ரியேஷன்'சுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புதிய நிர்வாகிகள் விவரம் வருமாறு:—

தலைவர்: ஆர். கெங்கோட்டுவேலன் பி.ஏ.,பி.எல்.; துணைத் தலைவர்கள்: ஜி. சுந்தரவேல் பி.காம்., இரா. ஆனந்தன்; செயலாளர்: சி. குழந்தைவேல்; துணைச்செயலாளர்: எஸ். வேணுகோபால்; பொருளாளர்: சி. எஸ். இராமச்சந்திரன்; துணைப் பொருளாளர்: எஸ். கிருஷ்ணன்.

சென்னையில் நடைபெற்ற 'தீ விபத்தால் அல்லற்பட்டு அவதியுறும் குடிசைவாழ் மக்களின் நிவாரண நிதிக்கு ரூ. 51 தமிழக முதலமைச்சர் பெயருக்கு, தொகைக்கான செக் ஒன்றும் அனுப்பப்பட்டது.

வீரப்பன்சத்திரம் பேரூராட்சி

24—7—67-ல், வீரப்பன்சத்திரம் பேரூராட்சி மன்ற அவசரக் கூட்டம் தலைவர் திரு. எம். இராமசாமி தலைமையில் நடந்தது; அதுபோது, தமிழக அரசின் கையைப் பலப்படுத்தும் பொருட்டு அரசின் சிறு சேமிப்புத் திட்டத்தில் ரூ. 10,000 முதலீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

தொழில்வளம் பெருக அண்ணா கூறும் யோசனை

திருத்தணி, ஜூலை 26—

"திடீர்ப் புரட்சி செய்ய வேண்டுமென்ற எண்ணமில்லாத நாடு இது! இல்லையென்றால், ஏன் மந்த நிலையில் தொழில் நடைபெறுகிறது? எந்தவிதத்தில் வேலை செய்தால் தொழில் வளருமோ அப்படியில்லாமல் இருப்பதால்தான் குறை ஏற்படுகிறதே தவிர, வேறொன்றுமல்ல!

"திட்டமிட்டுச் செயலாற்றினால் 15 ஆண்டுகளில் ஜப்பான் நாட்டைவிடச் சிறப்பாக நம் நாடு திகழும் என்பதில் யாரும் ஐயப்படத் தேவையில்லை!

"நமது நாடு மிகப் பெரிய நாடு; இவ்வளவு பெரிய நாட்டில் நாம் இருக்கிறோமே என்று பலருக்கு மகிழ்ச்சியும் உண்டு. இவ்வளவு பெரிய நாட்டில் வாழும் கோடிக்கணக்கான மக்களுக்குப் புதுவாழ்வு—நல்வாழ்வு தேடிக்கொடுக்க வேண்டுமானால், எல்லோரும் உழைக்க வேண்டும்; அதற்கு அடிப்படை, தொழில் வளம்; தொழில் வளத்திற்குத் தகுந்த இயற்கை வளம் இங்குண்டு.

"நான் ஜப்பான் நாட்டிற்குச் சென்றிருந்தபோது, இரும்புச் சாமான்களைத் தூக்கும் கருவிகளைத் தயாரித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தேன்; அங்கு நின்ற ஜப்பான்காரரிடம், 'இதெல்லாம் உங்கள் நாட்டிற்குத்தானே?' என்று கேட்டேன்; 'இது, ஆஸ்திரேலியா நாட்டிற்குப் போகிறது' என்றார் அவர்; 'ஆஸ்திரேலிய நாடு வெள்ளையர்கள் நாடு; அந்த நாட்டவர்கள் உங்களிடம் இந்தக் கருவிகளைக் கேட்டார்களா?' என்றேன்; 'அவர்கள் கேட்ட அளவுக்குக் கொடுக்க முடியவில்லை' என்று பதில் சொன்னார் அந்த ஜப்பான்காரர்.

"இவ்வளவு பெரிய அளவுக்கு இரும்புச் சாதனங்கள் அங்கே உற்பத்தி செய்வதால், 'ஜப்பானில் இரும்புச் சுரங்கம் இருக்குமோ' என்று சிலருக்கு எண்ணத் தோன்றும்; ஆனால் அங்கே சுரங்கமில்லை! நாம் போடும் துருப்பிடித்த—'ஒன்றுக்கும் உதவாது' என்று வீசியெறிந்த இரும்புத் துண்டுகளை ஜப்பானுக்கு எடுத்துச் சென்று கருவிகளாக்கி, ஆஸ்திரேலியாவிற்கு அனுப்புகின்றனர்!

"நாம் குப்பைமேட்டில் கொட்டிய இரும்புத் துகள்களையெல்லாம் கப்பல் கப்பலாக இறக்குமதி செய்து—உருக்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர் ஜப்பானியர்!

"நம் நாட்டில் பூமியைத் தோண்டிப் பார்ப்பவர்கள், 'விநாயகர் சிலை கிடைத்தது—அதன் துதிக்கை வலது பக்கம் இப்படியிருக்கிறது; இடது பக்கம் விநோதமாக இருக்கிறது; யாராவது புலவர்களை அழைத்து அகவல் பாடச் சொல்லவேண்டும்' என்கின்றனர்; 'இதுதான் புதைபொருள் ஆராய்ச்சி' என்று கூடச் சிலர் எண்ணுகின்றனர்!

"உலகத்தில் எது எது இருக்கிறது என்று நினைக்கிறார்களோ அதெல்லாம்—அத்தகைய கனிவளங்களெல்லாம் இங்கு புதையுண்டு கிடக்கின்றன!

(திருத்தணி — கார்த்திகேயபுரம் சரசுவதி ஆலைத் தொழிலாளர் கூட்டுறவு முதலாவது ஆண்டு விழாவில்)

நீதியின் பக்கமே நானிருப்பேன்!

திருத்தணி, ஜூலை 26—

"முதலாளிகளும்—தொழிலாளர்களும் ஒன்றிணைந்து இயங்கினால்தான் தொழில் முடக்கம் ஏற்படாது—இதை, முதலாளிகள் உணரவேண்டும்.

"தொழிலாளர்களின் உரிமைகளையும், நலன்களையும் எவ்வளவுக்கெவ்வளவு பாதுகாக்கின்றோமோ, அந்த அளவுக்குத் தொழில் வளம் பெருகும்!

"முன்பெல்லாம் முதலாளிகளைத் தொழிலாளர்கள் பார்க்கமுடியாது; ஆனால் இன்றிருக்கும் முதலாளிகள், காலம் போகின்ற போக்கிற்கு ஏற்றவாறு நடப்பார்கள்; அதனால் தொழிலாளர்களின் உரிமைகளை அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"இயந்திரங்களைப் பாதுகாப்பதுபோல் முதலாளிகள், தொழிலாளர்களைப் பாதுகாக்கவேண்டும்; தொழிலாளி கண்கலங்கினால், 'ஏன் உன் கண்கள் சிவந்திருக்கிறன்ன? ஏன் இப்படிப் பெருமூச்சுவிடுகிறாய்?' என்று கேட்கவேண்டும்; 'எவ்வளவோ பெரிய பாரங்களையெல்லாம் தூக்கும்போது இல்லாத சோர்வு இப்பொழுது ஏன் வந்தது?' என்று, அத்தொழிலாளியின் முகம் மலரும் விதத்தில் பரிவோடு கேட்டு ஆவன செய்தால், தொழில் கெடுமா—இல்லை—தொழில் நிறுத்தந்தான் ஏற்படுமா?

"நன்றாக ஓடிய பந்தயக் குதிரை கொஞ்சம் நொண்டினால்கூடச் சுட்டுவிடுவார்கள் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன்; அதுபோல், தொழிலாளர் நலிவடைந்தால் அவர்களை விரட்டிவிடக் கூடாது.

"சுடப்பட்ட குதிரை இறந்த பின், அதன் குட்டிகளை, அடுத்தவர் யாராவது வாங்கி வளர்த்துக்கொள்வார்; ஆனால், நலிவடைந்த தொழிலாளி மாள நேர்ந்தால், அவன் குடும்பத்தை யார் காப்பாற்றுவது?

"அமெரிக்காவிலிருந்தும், ஜப்பானிலிருந்தும் இயந்திரங்களைத் தருவிக்கலாம்; ஆனால், மனித இயந்திரங்களைத் தருவிக்க இயலாது! அந்த இயந்திரத்தையும் மனித இயந்திரம்தான் செய்கிறது! எனவே, நூற்றில் ஒரு பங்காவது பாட்டாளிகள் நலனில் அக்கறை காட்டவேண்டும்.

"தொழிலாளர் கோரிக்கைகளில் ஏதேனும் ஒன்றையாவது முதலாளிகள் நிறைவேற்ற வேண்டும்; அவ்வாறு செய்யாமல் —கோரிக்கைகளைத் கவனிக்காமல், 'முடியாது போ' என்றால், உழைப்பாளர்கள், 'எல்லாக் கோரிக்கைகளும் நிறைவேற்றப் படவேண்டும்' என்றுதான் சொல்லுவார்கள்!

"அந்த நேரத்தில் இந்தப் பிரச்சினை என்னிடம் வந்தால், நீதி எங்கே இருக்கிறதோ அங்கே நான் இருப்பேன்! அப்படி நான், 'நீதி எங்கே இருக்கிறது' என்று ஆராய்ந்து பார்ப்பதற்குள், பலருடைய வீடுகளின் அடுப்பங்கரைகளில் பூனைகள்தான் தூங்கிக்கொண்டிருக்கும்!

"தொழிலாளர்கள் வாழ்வில் அக்கறை காட்டுகின்ற அரசு இது! கண்ணுங்கருத்துமாகத் தொழிலாளர்களைக் காக்கக் கூடிய அரசு இது! எப்பொழுதும் தொழிலாளர்களுக்கு அருகிலேயே இந்த அரசு இருக்கும்!"

---முதலமைச்சர் அண்ணா

(திருத்தணி—கார்த்திகேயபுரம் சரசுவதி ஆலைத் தொழிலாளர் கூட்டுறவு ஆண்டு விழாவில்)

முத்தமிழில் முப்பால்

தருமபுரியில் அனைத்துலகத் தமிழர் பேரவை நடத்திய திருக்குறள் மாநாட்டில், ஜூலை 16-ம் நாள் இரவு, சலகண்டபுரம் ப. கண்ணன் அவர்களின் குறள்நெறி கலைக் குழுவினரின் 'முத்தமிழில் முப்பால்' கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

குறள்நெறி குறித்து ஆசிரியர் ப. கண்ணன் விளக்கம் தரவும்—இசைவாணர் காஞ்சி. டி. பி. பாலகிருஷ்ணன் குறளிசை பாடவும்—சேலம் குமாரி கிரிஜா இன்பத்துப் பால் இசைப் பாடல்களுக்குப் பரத நாட்டியம் ஆடவுமாக நிகழ்ச்சி மிகச் சிறப்பாகவும், புதுமையாகவும், பயனுள்ளதாகவும் அமைந்தது.

திருக்காரவாசல் வள்ளுவர் இலக்கியக்கழகம்

திருக்காரவாசல் வள்ளுவர் இலக்கியக் கழகத் திறப்பு விழா 20 7—67-ல் நடைபெற்றது. விழாவிற்கு ஊராட்சித் தலைவர் திரு. அ. சிங்காரவேலு தலைமையேற்றார். புதுக்கோட்டை சி. தமிழரசி பி.ஏ., வள்ளுவர் உருவப்படத்தைத் திறந்துவைத்து சொற்பொழிவாற்றினர்.

கிராமத் தலைவர் சு. இராமசாமி இனிப்பு வழங்க—மன்றத் தலைவர் மா. தமிழ்மணி நன்றிகூற விழா முடிந்தது.

துயர் துடைப்பு நிதி

குணியமுத்தூர் பேரூராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம், பொறுப்புத் தலைவர் திரு. எஸ். எம். உஸ்மான் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, சென்னை தீ விபத்து நிவாரண நிதிக்கு ரூ.1,001 கொடுப்பதென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வருந்துகிறோம்

ஆமலூர் தி. மு. க. செயற்குழு உறுப்பினர் கே. பத்மநாபன் 27—7—67 அன்று இயற்கையெய்தினர்; அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கு தி. மு. க. கிளை சார்பில் ஆறுதல் தெரிவிக்கப்படுகிறது.

கழகப் பொதுக்குழு உறுப்பினர் வேலாயுதம்பாளையம் வை. இரத்தினவேலு அவர்களின் மூத்த சகோதரியார் 21—7—67-ல் எதிர்பாராவகையில் இயற்கையெய்தினர்; மறுநாள் நடைபெற்ற சவ ஊர்வலத்தில் கரூர் வட்ட தி.மு.க. செயலாளர் ஆர். என். இராமசாமி, பரமத்தி சண்முகம், டி. பி. மூர்த்தி, ஏ. முத்துசாமி, எஸ். நல்லுசாமி, க. பெரியசாமி, கு. வெங்கடாசலம், க. நாச்சிமுத்து, மற்றும் உள்ளூர்—வெளியூர் கழக நண்பர்களும் கலந்துகொண்டு தங்களின் இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினர்.

இலங்கையில் சி. பி. சிற்றரசு

கழக ஆட்சி பற்றி செய்தியாளர்களிடம் விளக்கம்

கொழும்பு, சூலை 27—

"இனத்தாலும் மொழியாலும் நாம் அனைவரும் தமிழர்களே ; ஆனால், நாட்டால் வேறு நாட்டவர்கள். ஒவ்வொரு தமிழனும் இதை மனத்திற்கொண்டு தத்தமது நாட்டுக்கு விசுவாசமாக இருக்கவேண்டும் ; இதுவே தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா, இலங்கை வாழ் தம் சகோதர தமிழர்களுக்கு விடுக்கும் செய்தியாகும்"

இவ்வாறு, இலங்கை வந்துள்ள தி. மு. க. வெளியீட்டுச் செயலாளரும், மேலவை உறுப்பினருமாகிய திரு. சி. பி. சிற்றரசு அவர்கள், இங்கு செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது :—

"எனது இலங்கை வருகை, கட்சி நோக்கமுடையதல்ல; தனிப்பட்ட முறையிலேயே வந்துள்ளேன்.

நான் இலங்கை வருவதற்கு முன்னர் அறிஞர் அண்ணாவுடன் இரண்டு மணி நேரம் பேசிவிட்டு வந்தேன் ; அப்பொழுது அவர் 'இலங்கை வாழ் எந்த ஒரு குடிமகனின் மனத்தையும் புண்படுத்தாதவாறு பேசவேண்டும்' என்று என்னைப் பணித்துள்ளார்.

கடந்த 20 ஆண்டுகளுக்குப் பின் தமிழ்நாட்டு மக்கள் வழங்கியுள்ள சனநாயகத்தின் தீர்ப்பே இன்று தமிழகத்தில் தி. மு. க. ஆட்சி மலர்ந்துள்ளதற்குக் காரணமாகும்."

திரு. சிற்றரசு அவர்களுடன் சென்னை மாநகராட்சி உறுப்பினர்களான எம். மோகனரங்கன், ஆர். ஆறுமுகம், மற்றும் முல்லை வடிவேலு, எஸ். புண்ணியகோடி, வி. ஜி. இராசேந்திரன், பி. இ. இரத்தினம் ஆகியோரும் இலங்கை வந்துள்ளனர்.

அறிஞர் அண்ணாவிடம்

மாநகராட்சியின் திட்டம்

சென்னை, சூலை 28—

"சென்னை நகரில் தீயினால் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக சென்னை மாநகராட்சி, முறையே ரூ. 600, ரூ. 500 ரூ. 455, ரூ. 464—மதிப்புள்ள வீடுகள் பற்றிய திட்டத்தை முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் ஆய்வுக்காகக் கொடுத்திருக்கிறது ; அண்ணா அவர்கள் இத்திட்டங்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து முடிவு சொன்னவுடன், வீடு கட்டும் வேலை விரைவில் மேற்கொள்ளப்படும்"

என, மாநகராட்சி ஆணையர் அம்பாசங்கர் கூறினார்.

"முதலில் தியாகராய நகரில் உள்ள பத்திரிக்கரை — ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள சுண்ணாம்புக்கால்வாய் ஆகிய பகுதிகளில் இத்திட்டத்தை மாநகராட்சி செயல்படுத்தும்" எனவும் அவர் கூறினார்.

வணக்கம்
விற்பனையாகிறது!
கழகக் கதிர் மணிகள்
தொகுப்பாசிரியர்: மா. செங்குட்டுவன்
அண்ணாவின் பொற்காலம்
எழுதியவர்: சீலன். விலை 30 காசு.
தமிழ்ச்சொல் கேளீர் 30 காசு
எழுதியவர்: மா. செங்குட்டுவன்.
அடுத்து!
முதன் முதலில்.
ஆயிரம் முகவரிகள்.
ஆட்டோகிராப்
புதுமுறை!

விவரங்களுக்கு
மா. முத்து ஓவியர்
வண்ணக்களஞ்சியம்
250, லிங்கிசெட்டி தெரு, சென்னை-1
முத்து

மாற்றுக் கட்சி உறுப்பினர்கட்கு வலை வீச்சு

உ. பி. அரசியலில் தலைவர்கள் முயற்சி

இலட்சுமணபுரி, சூலை 28—

உத்தரப்பிரதேசச் சட்டமன்றத்தில் ஆளும் கட்சியான ஐக்கிய முன்னணியினரும், காங்கிரசு எதிர்க் கட்சியினரும் சிறிது காலமாக மௌனமாக இருந்த பின்னர், இப்போது மற்றக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கவர்ந்து இழுப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

தங்களுடைய கோரிக்கைகள் ஏற்கப்படாவிடில், அமைச்சரவைக்கு ஆதரவு அளிப்பதை கைவிடப் போவதாகக் குடியரசுக் கட்சி இறுதி எச்சரிக்கை விடுத்திருப்பது ஐக்கிய முன்னணி வட்டாரத்தில் சிறிது கவலையை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப் பிரதேசச் சட்டமன்றத்தில் இரு துணை அமைச்சர்கள் உட்பட 6 குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் இருக்கிறார்கள் ; இவர்கள், தங்கள் கட்சியைவிட்டு விலகி, ஐக்கிய முன்னணிக் கட்சியிலேயே ஐக்கியமாகலாம் என்று சொல்லப்படுகிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்கும் விடுதிக்கு ஆளுங் கட்சித் தலைவர்களும், எதிர்க் கட்சித் தலைவர்களும் அடிக்கடி சென்றுவருகிறார்களாம்.

முதலமைச்சர் நிதி

இதுவரையில் ரூ. 10,31,000

சென்னை, சூலை 29—

சென்னைத் தீ விபத்துத் துயர் தணிப்புப் பணிக்காக முதலமைச்சர் திரட்டிவரும் நிதிக்கு இதுவரையில் ரூ. 10,31,000 சேர்ந்துள்ளது.

ஒரு மொழிக்கு மட்டும் தனிச் சலுகை கூடாது!

டில்லி அரசிடம் தமிழக அரசு வற்புறுத்தல்

பள்ளிகளில் கட்டாய நூலக வகுப்பு ஏற்படும்

சென்னை, சூலை 28—

"எல்லாப் பள்ளிகளிலும் வாரத்திற்கு ஒருமுறை ஒரு மணி நேரம் கட்டாய நூலக வகுப்பு நடத்த உத்தர விடுவதுபற்றி அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது"

என்று கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், மவுண்ட் ரோடிலுள்ள ஹிக்கின்பாதம்ஸ் புத்தக விற்பனை நிலையத்தில், 'தென் மொழிகள் புத்தக டிரஸ்ட்' அமைத்துள்ள புத்தகக் காட்சி அரங்கைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார், அவர் மேலும் கூறியதாவது :—

"'இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளுக்கும் ஒரேவிதமான சலுகையளிக்க வேண்டும் ; குறிப்பிட்ட ஒரு மொழிக்கு மட்டும் தனிச் சலுகை அளிக்கக் கூடாது' என்று மத்திய அரசிடம் வற்புறுத்தப்பட்டுள்ளது.

"தமிழகத்தில் இப்போதுள்ள கணக்குப்படி 100-க்கு 36 பேர்தான் படித்திருக்கிறார்கள். இவர்களில் அரைகுறையாகப் படித்தவர்கள் 24-பேர். இந்த நிலையில் உள்ள மக்களிடம் புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவது சிரமம்தான்.

"ஆயினும், தமிழ் மொழியே பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாட மொழியாவதால் அங்குள்ள நூலகங்களில் எல்லாம் தமிழ்ப் புத்தகங்கள் இடம்பெற வேண்டும். அதற்கேற்ற வகையில் எல்லாத் துறை நூல்களும் தமிழில் வெளியிடுவதற்கு இந்தக் கண்காட்சி உதவவேண்டும்."

குறுகிய அரசியல் நோக்கத்திற்கு தூத்துக்குடி--சேலம் திட்டங்கள் பலியாகிவிட்டனவா?

தூத்துக்குடித் திட்டம், முன்னாள் போக்குவரத்து அமைச்சர் காலஞ்சென்ற டாக்டர் சுப்பராயன் முயற்சியால் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நேருவே நேரில் சென்று, 'இத்திட்டம் அவசியமானது ; வெகு காலமாய்ப் புறக்கணிக்கப்பட்ட தமிழகத் தென்கோடி மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதது' என்று கண்டு, அதைத் துரிதமாக நிறைவேற்றும்படி பணித்தார்.

அதிகாரிகளும் பரிசிலனை செய்து, 'இத்திட்டம் பொருளாதார ரீதியில் சாத்தியமானதே' என்று முடிவுக்கு வந்தனர்.

1970—71-ல் தூத்துக்குடித் துறைமுகம் முழுமையாகக் கட்டி முடிக்கப்படும் சமயம் ; '17 இலட்சம்முதல் 20 இலட்சம் டன்வரை போக்குவரத்து நடைபெற வாய்ப்பு இருக்கிறது' என்று அறிக்கை உறுதி கூறியது ; வேலைகளும் துவங்கப்பட்டன ; ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் வீதம் இதுவரை ஐந்தரை கோடி ரூபாய்வரை செலவு செய்யப்பட்டது. 1,500 தொழிலாளர்கள் துறைமுகத் திட்டத்தில் வேலை செய்துவருகின்றனர்.

இதற்கு ஆண்டுமுதலில் தூத்துக்குடித் திட்டம் திடீரென்று கைவிடப்படும் நிலை வந்தது ; இதற்குக் காரணம், திட்டக் கமிஷன்தான். அதன் வற்புறுத்தலின்பேரில், போக்குவரத்து இலாகாவைச் சேர்ந்த ஓர் அதிகாரி, 'மீண்டும் ஒரு ஆராய்ச்சி' நடத்தி, தூத்துக்குடித் திட்டம் ஒரு 'முட்டாள்தனமான யோசனை ; இங்கே 10 இலட்சம் டன்னுக்குமேல் போக்குவரத்து ஏற்பட வழியில்லை ; இதை ஒரு மீன்பிடிப்புத் துறைமுகமாக வைத்துக் கொள்ளலாம் ; அதற்குமேல் விஸ்தரிப்பது வீண் செலவு' என்று எழுதிவிட்டார்.

"இம்மாதிரி அறிக்கையை யார் கேட்டார்கள் என்று தெரியவில்லை ! வேண்டும் என்றே யாரோ தூண்டிவிட்டு, பாதகமான அறிக்கையைத் தயாரிக்கச் செய்தார்கள்" என்று கூறப்படுகிறது !

இதுபற்றிய உண்மை வெளிக்கு வருவது கஷ்டம் ; ஆனால், டில்லி சர்க்கார் ஏற்று நடத்தும் திட்டங்கள் எல்லாமே இம்மாதிரியான குறுகிய அரசியல் கண்ணோக்குடன் ஆராயப்படுவது வெளிப்படை !

அமைச்சர்கள் இரண்டு, மூன்று வருடங்களுக்கு ஒரு முறை மாறுவதால், அவர்கள், தங்கள் தொகுதிக்கும் மாநிலத்துக்கும் முடிந்தவரை பொருளாதார அபிவிருத்திக்காகப் பாடுபடுகின்றனர் ; 'இது தவறானது' என்று கூறிவிட முடியாது. அமைச்சர்களின் எதிர்காலம், 'அவருடைய சொந்தப் பகுதிக்கு என்ன செய்தார்' என்பதைப் பொறுத்திருக்கிறது !

ஆனால் அமைச்சர்கள் மாறும் போது, வேறு மாநில அமைச்சர்கள் வந்து, 'நம் வீட்டுக்கு இல்லாதது அடுத்த வீட்டுக்கும் வேண்டாம்' என—ஏற்கனவே முடிவான திட்டங்களைப் புறக்கணிக்கும் ரீதியில்—செயல்பட ஆரம்பிக்கும் போதுதான், அரசியல் கண்ணோட்டம், நாட்டின்

பொருளாதார வளர்ச்சிக்கு ஆபத்தாக முடிகிறது !

சேலம் திட்டம் இப்படித்தான் குறுகிய அரசியல் நோக்கத்திற்குப் பலியாகிவிட்டது !

—['மித்திரன்' (சென்னை 28—7—67) இதழில், அதன் டில்லி அரசியல் நிருபர் எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதி.]

நகராட்சிகளுக்குக் கூடுதல் அதிகாரம்

தமிழக அரசு சட்டம் இயற்றும்

திருநெல்வேலி, சூலை 27—

உள்ளாட்சி மன்றங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் அளிக்க வகை செய்வதற்கான சட்டம் இயற்றப்படும் என்றும், அப்படிச் சட்டம் இயற்றப்படும் போது நகராட்சிமன்றத் தலைவர்களையும் கலந்து ஆலோசிக்கப்படும் என்றும் சட்டத் துறையமைச்சர் திரு. மாதவன் இங்கு தெரிவித்தார்.

தூத்துக்குடி நகராட்சிமன்றச் சார்பில் அமைச்சருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. வரவேற்புக்குப் பதிலளித்து அமைச்சர் பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

நகராட்சித் தலைவர் திரு. பொன் சாமுவேல் வரவேற்பிதழைப் படித்தளித்தார்.

பாங்கி ஊழியர் ஆர்ப்பாட்டம்

திருப்பத்தூர் (வ. ஆ.) மதுரை பாங்கி ஊழியர்கள், 17—7—67 முதல் 22—7—67 வரை தினசரி மாலை 2-45 மணி முதல் 3 மணி வரையில், மற்ற பாங்கி ஊழியர்களுடன் மதுரை பாங்கியின் முன் நின்றுகொண்டு முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தர்மபுரி மாவட்ட தி.மு.க. குழுக் கூட்டம்

"தர்மபுரி மாவட்ட தி. மு. க. குழுக் கூட்டம், 1—8—67 பிற்பகல் 1-மணிக்கு ஒகனேகல் சுற்றுலா விடுதியில் நடைபெறும் ; மாவட்ட விவசாயிகள் மாநாடு—சென்னைத் தீ விபத்துத் துயர் தணிப்பு நிதி திரட்டல்—மாவட்ட வளர்ச்சிக்கான பணிகள் ஆகியவை குறித்து ஆலோசிக்கப்படும ; மாவட்ட உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுகிறேன்"

என, மாவட்டச் செயலாளர் எச். எல். முருகேசன் அறிவிக்கிறார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

30--7--67

சென்னை 94-வது வட்டம்

முத்தமிழ் வளர்ச்சி மன்ற முதலாண்டு விழாவும், மேல் நாடு சென்று திரும்பிய மேயர் குழுவினருக்கு வரவேற்பும் ; மாலை 7-மணிக்கு ஆலையம்மன் திடலில் ; தலைவர் : சா. கோவிந்தசாமி ; பேசுவோர் : அமைச்சர் மு. கருணாநிதி, சிற்றுளி சுப்பிரமணியம், சிட்டிபாபு எம்.பி., இரா. சடகோபன் எம்.சி., வ. புருடோத்தமன் எம்.சி., கு. சுந்தரம், வ. மு. வாமணன், சோ. நடராசன், டி. இராசன்.

31--7--67

தேரிருவேலி

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு அண்ணா திடலில் ; தலைவர் : பி. எஸ். எச். அபுதாகீர் ; பேசுவோர் : மாங்குடி மதியழகன், அலங்காரம் எம்.எல்.ஏ., வே. கண்ணன், ஆர். எம். அலியார், முத்து அடிகள். (மதுரை உதயசூரியன் கலைக் குழுவின் கலைநிகழ்ச்சி உண்டு)

கா. சு. பிள்ளை தமிழ் ஆராய்ச்சி மன்றத் திறப்புவிழா

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமைவகிப்பார்

பேராசிரியர் கா. சு. பிள்ளை தமிழ் ஆராய்ச்சி மன்றத் திறப்பு விழா, 31—7—67 மாலை 6-30 மணிக்கு கோகலே மண்டபத்தில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெறும் ; இராசாசர் முத்தையா (செட்டியார்), நா. மகாலிங்கம், டாக்டர் கே. கே. பிள்ளை, மு. இராசாக்கண்ணனார், அ. மு. பரமசிவானந்தம், யோகி சுத்தானந்த பாரதியார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

புதுவை-முத்தியால்பேட்டையில் தமிழக அமைச்சர்கட்கு வரவேற்பு

புதுவை - முத்தியாலுப்பேட்டை தி. மு. க. சார்பில், 31—7—67 மாலை 5-மணிக்கு கழகப் பணிமனைமுன், தமிழகப் பொதுப்பணித் துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி, வேளாண்மைத் துறையமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி ஆகியோருக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.லி, அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) [illegible]